# அறநெறி அமுதம்

E-22



இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலை.

40, ராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06.

அமுதம் 1 துளி 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்முகம் - ஓர் அறிமுகம்!



1) ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்க்கையும் உபதேசமும்

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்க்கையையும் உபதேசங்களையும் சுருக்கமாக இந்நூல் தருகிறது.

எழுதியவர் : சுவாமி தபஸ்யானந்தர்.

விலை: ரூ 23.00

2) ஸ்ரீ சாரதாதேவி வாழ்க்கையும் உபதேசமும்

ஸ்ரீ சாரதாதேவி வாழ்க்கையும் உபதேசங்களும் இந்நூலில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

எழுதியவர் : சுவாமி தபஸ்யானந்தர்.

விலை: ரூ 18.00

3) சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையும் செய்தியும்


சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையையும் அவர் நமக்கு விட்டுச் சென்ற செய்தியையும் சுருக்கமாக இந்நூல் தருகிறது.

எழுதியவர் : சுவாமி தபஸ்யானந்தர்.

விலை: ரூ 27.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை



குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேஸ்வர:
குரு:சாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம:

ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வ தர்ம ஸ்வரூபிணே
அவதார வரிஷ்டாய ராமகிருஷ்ணாய தே நம:

ஜனனீம் ஸாரதாம் தேவீம் ராமக்ருஷ்ணம் ஜகத்குரும்
பாதபத்மே தயோ: ச்ரித்வா ப்ரணமாமி முஹுர் முஹு:

நம: ஸ்ரீயதிராஜாய விவேகானந்த ஸூரயே
ஸத் சித் சுக ஸ்வரூபாய ஸ்வாமினே தாபஹாரிணே

தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத்து அங்குஅன்பு வைத்தது இலையாகும்
நீஇடர்ப் பட்டிருந்து என்செய்வாய் நெஞ்சமே
போமிடத்து என்னொடும் போதுகண் டாயே.

பொருள்: -

கொழு கொம்பில்லாமல் துவண்டு தீயிடைப்பட்ட தளிர்போல் துன்பத்தினால் வாடினும், மனவுறுதியுடையோர், நன்மையைத் தருவது போல் மயங்க வைக்கும் மாய மனதிடம் அன்பு வைத்து அதன் வழிச் செல்வதில்லை. எனவே, மனமே! நீ தனியே துன்பப்பட்டிருந்து என்ன செய்யப் போகிறாய்? இறைவனை நாடிப் போகும் போது என்னோடு வருவாயாக.

-திருமந்திரம்-

---

ராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலை.
40, ராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த இதழில்...


| பக்கம் | தலைப்பு | | எழுதியவர் |
| --- | --- | --- | --- |
| 1 | பிரார்த்தனை | | |
| 2 | ஆசிரியர் உரை | | |
| 3 | நன்றே செய்வாய், இன்றே செய்வாய் | – | அ. ஹரீஷன், ஆண்டு 10 |
| 4 | நாமும் பயில்வோம் | – | ப. சரவணன், ஆண்டு 8 |
| 6 | அப்புறமாப் பார்ப்போம் | | |
| 7 | நமது பயணப் பாதையின் ஒரு வரைபடம் | | |
| 9 | கருணை | – | அர்ச்சிதா, ஆண்டு 4 |
| 10 | உலகம் நல்லதா? கெட்டதா? | – | பிரஷோபிதா, ஆண்டு 5 |
| 11 | யார் அந்த மகான்? (படக்கதை) | | |
| 14 | கேட்டுச் சுவைத்தவை | | |
| 17 | நெஞ்சை நெகிழ வைக்கும் உண்மை | | |
| 18 | இராமகிருஷ்ண குடும்பம் | | |
| 19 | செய்தி (பொன்விழா ஆண்டினைக் கொண்டாடும் – இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலை) | | |
| 23 | கடிதத்திலிருந்து... | | |
| 24 | இது உங்கள் பக்கம் | | |


## இதழாசிரியர்களிடமிருந்து...

அன்னையின் அனுக்கிரகத்தால் நமது ராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலை 49 ஆண்டுகளைப் பூர்த்திசெய்து 50 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில், நமது அறநெறி அமுதத்தின் 4 ஆவது துளியும், பொன்விழா சம்பந்தமான செய்திகளைத் தாங்கி வருகிறது. அத்துடன் மாணவ சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாக இருக்கும் முயற்சி இன்மை, சோம்பல் இவையிரண்டையும் உதறித்தள்ளி 'நன்றே செய்க, அதனை இன்றே செய்க' என்ற தொனிப்பொருளையும் தாங்கிவருகிறது இத்துளி!

பல பெரியவர்கள், நண்பர்கள், சகோதர சகோதரிகள் நல்ல பயனுள்ள, ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களையும் இத்தருணத்தில் நினைவுகூறக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களது கருத்துக்களை நன்றியுடன் ஏற்றுக்கொள்கின்றோம். அத்துடன் மேலும் எதிர்பார்க்கிறோம்.


- இதழாசிரியர் குழு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றே செய்வாய்! இன்றே செய்வாய்!!

நன்றே செய்வாய்! அதனை
இன்றே செய்வாய்!!
ஆம்! அருமையான வாசகம்!
தூசி படிந்துபோன உன்
துன்பவாழ்வின் மாசுகளை
நீக்கும் மகத்தான வாசகம்!
சிறிது சிந்தித்துப் பார்!!



தீமை செய்து வாழ்வதற்கா இந்த
உலகில் வந்துதித்தாய்!
துன்பங்களை விதைத்து விட்டுக்
கவலைகளையா அறுவடை செய்யப்
போகின்றாய்?
இன்று நீ துள்ளி விளையாடும்
வாலிபன்
ஆனால்! நாளை ?

நரை கூடி முகம் வாடி
மரணத்தின் எல்லைகளை நோக்கிப்
பயணித்துக் கொண்டிருக்கும்
ஒருபயணி !
அன்று உன்னால் நற்செயல்களை
நினைக்கத் தான் முடியுமா?

நேற்றிருந்தவர் இன்றில்லை!
இன்றிருப்பவரோ நாளை?
இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதே!
மகோன்னதமான வாய்ப்பு உன்
மனக்கதவுகளைத் தட்டுகின்றது!
பயன்படுத்திக் கொள்!

வெறிபிடித்த குரங்கையொத்த உன்
மனம் நாளை என்னவோ! தெரியாது!
சூழ்நிலை மாறுமா? அல்லது
சூழ்நிலையை மாற்றுமா? என்பதும்
புரியாது.

என் அன்பிற்குரியவனே!
செயல்! செயல்! நன்றான செயல்!
அதுதான் உன் மூச்சு! பேச்சு
எல்லாம்...
சோம்பலை உதறித் தள்ளி விடு!
மனதினில் வேகங் கொண்டு விடு!
நாளை என்பதை மறந்து விடு!
நன்மை செய்யவே தொடங்கி விடு!
இன்றைய நாள் உன் இலட்சிய
ஏணியின்
முதற்படி! எனவே முடிவெடு!
நன்றே செய்வாய்! அதனை
இன்றே இப்பொழுதே இந்நிமிடமே
தொடங்குவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் பயில்வோம்.

ஓட்டமும் துள்ளுதலும்

ஓட்டம் 3வகைப்படும். அவையாவன:

- 1ம் ஜோதி
- 2ம் ஜோதி
- 3ம் ஜோதி



**கை வைக்கும் முறை**

- 1ம் படத்தில் காட்டியவாறு கைப்பெருவிரலை உட்பக்கமாக மடிக்க வேண்டும்.
- 2ம் படத்தில் காட்டியவாறு பெருவிரல் உட்பக்கமாக இருக்க கையைப் பொத்திப் பிடிக்கவும்.
- 3ம் படத்தில் காட்டியவாறு கையை மார்பினில் வைக்கவேண்டும்.

**ஜோதி செய்யும் போது கவனிக்கவேண்டியவை**

- வாய்மூடி மூக்கினால் சுவாசிக்க வேண்டும்.
- கைமார்பை விட்டு விலகாமல் இருக்கவேண்டும்.
- ஓட்டத்தை இடைநிறுத்தாமல் தொடர்ந்து 3 ஜோதியையும் செய்ய வேண்டும்.
- நிமிர்ந்திருந்து ஓட்டத்தைச்செய்யவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ம் ஜோதி

2ம், 3ம் படங்களில் காட்டியவாறு கால்பின்புறமாகப் படுமாறு ஓடவும்.முதலில் மெதுவாக ஆரம்பித்துப் படிப்படியாக வேகத்தைக் கூட்டவும். சிறிது சிறிதாக வேகத்தைக் குறைத்துப் பழைய நிலைக்கு வரவும்.



## 2ம் ஜோதி

2ம், 3ம் படங்களில் காட்டியவாறு நிலத்துக்குச் சமாந்தரமாக கால்களைத் தூக்கி ஓடவும். படிப்படியாக வேகத்தைக்கூட்டி, பின் சிறிது சிறிதாக வேகத்தைக்குறைக்கவும்.



## 3ம் ஜோதி

2ம், 3ம் படங்களில் காட்டியவாறு காலைப் பக்கவாட்டாக வளைத்து ஓடவும். காலைத் தூக்கும்போது பின்னே திரும்பிக் காலைப் பார்க்கவும். படிப்படியாக வேகத்தைக் கூட்டி, பின் சிறிது சிறிதாக வேகத்தைக் குறைக்கவும். மேற்கூறிய அனைத்தையும் விடாமற் செய்யவும்.

**முதலில் நாம் தெய்வங்களாவோம். அதன் பின், பிறரும் தெய்வங்களாகத் துணைபுரிவோம். 'ஆகுக, ஆக்குக' இதுவே நமது குறிக்கோளாகட்டும்.**

**- சுவாமி விவேகானந்தர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்புறமாப் பார்ப்போம்



ஒரு அம்மா இருந்தாங்க. கடவுள் மேல பக்தியும், கூடவே கடமையுணர்வும் கொண்டவங்க. ஆனா நம்மைப் போலவே உலக விஷயங்களுக்கு முதலிடம், ஆன்மீகம் என்றால் அடுத்தபடி தான்! அவங்க தனது வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற மடத்து சுவாமி கிட்ட "எனக்கு ஒரு மகள் இருக்கா. அவளுக்கு கல்யாணம் முடிச்சு வைச்சுட்டா என் பொறுப்பெல்லாம் முடிஞ்சிடும். அதுக்கப்புறம், நான் நிம்மதியா சத்சங்கத்தில கலந்துக்கலாம்" என்று ரொம்ப பயபக்தியாச் சொன்னாங்க. சுவாமியும் அமைதியாக் கேட்டார்.



மகளுக்கு கல்யாணம் எல்லாம் ஆச்சு. அந்த அம்மா மறுபடியும் சுவாமிகிட்ட வந்தாங்க. "சுவாமி! மகளுக்கு கல்யாணம் நல்லா முடிஞ்சுபோச்சு. அவளோட குடும்பத்தை நல்லா 'செட்டில்' பண்ணிக் கொடுத்திட்டு அப்புறமா சத்சங்கத்துக்கு வர்றேன்" என்று சொன்னாங்க. சுவாமி, அப்பவும் அமைதியா கேட்டார். சில நாள் ஆச்சு, மீண்டும் அந்த அம்மா சுவாமியைச் சந்திச்சாங்க. "மகளுக்கு குழந்தை புறந்திருக்கு, அவளுக்குத் துணையா இருந்து வேலைகளை முடிச்சிட்டு அப்புறம் நான் எந்தக் கவலையும் இல்லாம வர்றேன்" என்னாங்க அந்த அம்மா. சுவாமி அப்பவும் அமைதியா அதைக் கேட்டார். அடுத்தநாள் சுவாமி வீதிக்கு வந்தப்போ தூரத்திலே ஒரு ஜனக் கூட்டம்!!. "சத்சங்கத்துக்கு, அப்புறமா வர்றேன்" என்னு சொன்ன அம்மா செத்துப்போய், வீதியிலே பிணமாகக் கிடந்தாங்க! சுவாமியும் என்னைக்கும் போல அமைதியா கடவுள் பேரை சொல்லிட்டு போயிட்டார். அந்த அமைதிக்குப் பின்னாடி எத்தனை அர்த்தம் இருக்குத் தெரியுமா! ?

இன்னைக்கு இந்த விஞ்ஞான உலகத்துக்குப் பின்னாடி ஓட்டமோ ஓட்டம் என்னு ஓடிக்கொண்டிருக்கும் நாங்க, "சத்சங்கமா? கடவுளா? அதெல்லாம் எதுக்கு? வயசான காலத்துல பார்த்துக்கலாம்" என்னு நமக்கு நாமே ஆயுள் எழுதி வைச்ச மாதிரி பேசிக்கிறோம். பென்ஷன் எடுத்துங்கூட வேலைக்கு திரும்பத் திரும்ப சண்டை போடும் இன்னைய முதியோர் சமுதாயத்துக்கு, நேரம் எங்க கிடைக்கப்போகுது?. நம்ம இந்து சமயம் சொல்லுற படி வாழக் கத்துக்கிட்டா நாம முழுமனிதனா என்றைக்கும் அமைதியா, ஆனந்தமா, நிச்சயமா வாழமுடியும்! கிடைக்கிற சந்தர்ப்பததை நழுவ விடாம "இப்பவே!, இந்த நிமிஷமே செய்யத்தொடங்குவோம்". அப்பிடிப் பண்ண முடிஞ்சா வெற்றியின் முதல் படில ஏறிட்டோம் என்னுதான் அர்த்தம். இதை நாம கொஞ்சம் யோசிச்சுப் பார்க்கணும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பயணப் பாதையின் ஒரு வரைபடம்



அது எழில் கொஞ்சும் ஒரு மலர் வனம். இயற்கை தனது அழகையெல்லாம் அள்ளிக் கொட்டி அங்கு ஓர் அற்புத உலகைச் சிருஷ்டித்திருந்தது. பச்சைப் பட்டு விரித்தது போன்ற புல்வெளிகள், மலர்ந்து மணம் பரப்பும் வண்ணமலர்க்கூட்டங்கள், அந்த மலர்களில் தேனைப் பருகுவதற்காக அமர்வதும் எழுவதுமாகப் பற்பல வண்ணஜாலங்களை அள்ளி வீசியபடி படபடத்துக் கொண்டிருக்கின்ற வண்ணத்துப்பூச்சிகள், சலசலத்துப் பாய்கின்ற தெள்ளிய நீரோடைகள், அதில் நீந்தித் திரிகின்ற மீன்கள், நிழல்பரப்பி நிற்கின்ற மரங்கள், அசைகின்ற அவற்றின் கிளைகளில் அமர்ந்து இன்குரல் எழுப்பிப் பாடியவாறே ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்ற புள்ளினங்கள் என்று அங்கு ஓர் ஆனந்த உலகமே விரிந்திருந்தது. ஆனால் இத்தனை இன்பங்களிலும் சின்னக் குருவி ஒன்று மட்டும் எவ்விதப் பங்கும் எடுத்துக் கொள்ளவில்லை, கொள்ளும் நிலையிலும் அது இல்லை. நச்சுப்பழங்களை உண்டதன் காரணமாகவோ என்னவோ அது உணர்விழந்து செயலற்று ஒரு மரத்தின் அடியில் கிடந்தது.

காலைகள் வந்தன, போயின; கதிரவன் உதித்தான், மறைந்தான்; நிலவு எழுந்தது, அணைந்தது; தாரைகள் மின்னின, மங்கின. ஆனால் பாவம், அந்தக் குருவி மட்டும் இயற்கையின் இந்த எழில் நாடகங்கள் எதனையும் காணவில்லை. காலங்கள் கடந்தன. எந்த மயக்கத்திற்கும் ஒரு முடிவு உண்டல்லவா! நஞ்சின் வேகம் தணிந்ததும் அந்தக் குருவியின் மயக்கம் நீங்கியது. அதன் உணர்வு மெல்ல மெல்லத் திரும்பலாயிற்று. ஆனால் என்ன சோதனை! விழித்த அது எங்கும் அடர்ந்த இருளை மட்டுமே கண்டது. ஏனெனில், அதனால் கண்களையே திறக்க முடியவில்லை! உணர்விழந்து செயலற்றுக் கிடந்த நாட்களில், உடம்பு முழுவதும் சேறும் சகதியும் ஒட்டிக்கொண்டதால், தன் பறவை உருவமே மறைந்து இப்போது ஒரு மண்பிண்டம் போலக் கிடப்பது, பாவம், எப்படி அந்தக் குருவிக்குத் தெரியும். எப்படியோ சேறும் சகதியும் சற்று விலகியதும் மெல்ல அதன் கண்கள் திறந்தன. திறந்த பின்னரோ, கண்கள் திறக்காமலே இருந்திருந்தால் இன்னும் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும் என்று தோன்றியது அந்தக் குருவிக்கு. அதன் உருவம் அவ்வளவு விகாரமாயிருந்தது. தன் உருவத்தையே பார்த்துப் பரிதாபப்பட்டது அந்தச் சின்னக் குருவி.

இந்தச் சோகச் சுமையினூடே அந்தக்குருவியினுள் ஏதோ ஒரு நினைவுக் கீற்று நம்பிக்கைக் கிரணம்..."இல்லை, இல்லை நான் வெறும் ஒரு மண்பிண்டம் இல்லை வானமெங்கும் பறந்து களித்துக் கொண்டிருந்த வண்ணப்பறவை நான், நச்சுப்பழத்தை உண்டதால் உணர்வை இழந்தேன். உணர்விழந்து கிடந்த வேளையில் சேறும் சகதியும் ஒட்டிக்கொள்ள, என்னையே நான் இழந்து விட்டிருக்கின்றேன்" என்ற உண்மை அந்தச் சின்னக்குருவியின் சிந்தனையில் உதயமாயிற்று. பார்த்துப் பார்த்து பரிதாபப்படுவதைவிட, முனைந்து செயலாற்றி இழந்த தன்னை எப்படியாவது பெறுவதுதான் முதல் வேலை என்று முடிவு செய்து கொண்டது அந்தக்குருவி. தன் கூரிய அலகால் உடம்பைக் கொத்திக் கொத்தி, சேற்றையும் சகதியையும் களையத்தொடங்கியது.

அந்தக் குருவி நினைத்தது போல் இழந்த தன்னைப் பெறுவது என்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. சேற்றை விலக்குவதற்காக அலகால் கொத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது உடம்பில் அங்கங்கே இரத்தம் கூட வழிந்தது. ஆனால் அந்தக் குருவி அதை எல்லாம் லட்சியம் செய்வதாக இல்லை. எப்படியாவது இந்தச் சேற்றிலிருந்து விடுபட வேண்டும் என்ற விடாமுயற்சியுடன் செயல்பட்டது அது.

கூரிய அலகு குத்தியதால் ஏற்பட்ட காயங்கள் தந்த வேதனை ஒரு புறம்; இழந்த தன்னை மீண்டும் அடையப் பெறுவேனா என்ற தவிப்பு ஒருபுறம். இவ்வாறு தொடர்ந்தது அந்தச் சின்னக்குருவியின் முயற்சி.

முயற்சி ஒருபோதும் வீணாவதில்லை; எவ்வளவு சிறிய முயற்சி ஆயினும் அதற்குரிய பலன் கிடைத்தே தீரும். கடைசியாக ஒருநாள் அந்தக் குருவியின் முயற்சியும் வெற்றி பெற்றது. அதனை மூடி ஒரு மண்பிண்டமாக அடித்திருந்த சேறும் சகதியும் முற்றிலுமாக விலகின. அருகில் பாய்ந்து கொண்டிருந்த தெள்ளிய நீரோடையில் தன்னை ஒரு முறை நீராட்டிக் கொண்டது அந்தக் குருவி. காயங்கள் தந்த வேதனையும் மறைந்தது. அப்பப்பா, என்ன நிம்மதி! தன்னை ஒரு முறை நன்றாகப் பார்த்தது அந்தக் குருவி. அதன் இறகில் தான் எத்தனை வண்ணங்கள்! ஒரு முறை தன் உடம்பைச் சிலிர்த்துக்கொண்டது அது! இழந்த தன்னை மீண்டும் பெற்ற அந்தக் குருவிக்கு மரத்தில் தன் கூடு இருப்பது நினைவுக்கு வந்தது. சிறகுகளைப் படபடவென்று அடித்துக்கொண்டே பறந்து, மலர்வனம் முழுவதையும் ஒருமுறை வலம் வந்துவிட்டு, தன் கூட்டில் அமைதியாக அமர்ந்து அந்த மலர்வனத்தின் அற்புத அழகை அள்ளிப் பருகலாயிற்று; அதனுடன் ஒன்றித் திளைக்கலாயிற்று அந்தக் குருவி.

நாட்கள் சென்றன. உல்லாசம் பொங்க, ஆனந்தம் அலைபாய அந்தக் குருவி மரங்கள் தோறும் பறந்து திரிந்து இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தது. ஆனாலும் அந்தக் குருவியின் மனத்தினுள் மெல்லிய ஏதோ ஒரு சோகம்! இன்னும் ஏதோ ஒன்றை அடைய வேண்டும் என்ற ஏக்கம்... "இழந்த என்னைப் பெற்றது உண்மை தான். இந்த மலர்வனமெங்கும் பறந்து திரிந்து களிக்க என்னால் முடியும் என்பதும் உண்மைதான். ஆனாலும் இது என்ன வாழ்க்கை! சில பழங்களை உண்டு இன்புறு-வதும், சில பழங்களை உண்டு துன்புறுவதுமாகத் தான் என் வாழ்க்கை செல்ல வேண்டுமா? எப்போதும் ஆனந்தமாக இருக்க என்னால் முடியாதா? முடியுமானால் அதற்கு வழி?" இந்த எண்ணம் அவ்வப்போது அந்தக் குருவியின் மனத்தில் எழுந்து அடங்கியது. நாட்கள் செல்லச்செல்ல இந்த எண்ணம் அதனிடம் வலுப்பெற்றது. இடையீடற்ற ஆனந்தத்தைப் பெறுவது எப்படி? இது ஒன்றே அதன் சிந்தனை ஆயிற்று. ஒரு நாள் அந்தி மயங்குகின்ற அற்புத மாலை வேளை. அந்தச் சின்னக் குருவி தன் கூட்டின் வாசலில் நிச்சலனமாக அமர்ந்து, எங்கும் படர்ந்து கொண்டிருக்கும் இருட்டின் அழகை ரசித்துக் கொண்டிருந்தது. விடாமல் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற அந்த எண்ணம் - நிலையான ஆனந்தத்தைப் பெறுவது எப்படி? அப்போதும் அதனுள் எழுந்தது. அப்போது அந்த இருளில் எங்கோ மேலிருந்து பொன்னொளிர்க் கதிர்கள் எங்கும் பரந்தன! அந்தப் பொற்கிரணங்கள் சின்னக் குருவியை முழுக்காட்டி, அந்த மலர்வனத்தையே பொன் வண்ணத்தில் குழைக்கத் தொடங்கியது! ஆச்சரியம் மேலிட அண்ணாந்து பார்த்தது அந்தக் குருவி. அங்கே..., அந்த மரத்தின் உச்சாணிக் கிளை ஒன்றில் அற்புதப்பறவை ஒன்று அமர்ந்திருந்தது. அதன் உடலிலிருந்து கிளம்பிய பொன்னிறக் கிரணங்களே அந்த மலர் வனத்திற்குப் பொன் வண்ணம் பூசிக்கொண்டிருந்தது. அமைதி, ஆனந்தம், அன்பு, கருணை அனைத்தும் அந்த அற்புதப் பறவையிடமிருந்து பொங்கிப் பெருகுவது போல் தோன்றியது! துன்பம், சோகம் என்பவற்றின் நிழல் கூட அந்தப் பறவையிடம் இல்லை. மாட்சிமையுடன் அமர்ந்திருந்த அந்தப் பறவையைக் கண்கொட்டாமல் பார்த்தது சின்னக் குருவி. "இவனே உன் தலைவன், இவனை நீ பற்றிக் கொள். நீயும் துன்ப துயரங்கள் எதுவுமற்ற உலகை அடையலாம்" என்று அதன் உள்மனம் கூவிற்று. மேலே அமர்ந்திருந்த பறவையின் கருணை பொழிகின்ற கண்களும் சற்றே அசைந்து 'மேலே வா' என்று கனிவுடன் சின்னக் குருவியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தது. சிறகுகளை விரித்த சின்னக் குருவி பொன்னொளிப் பாதையில் பறக்கலாயிற்று.

நம்மைத் தேடி நாம் செல்கின்ற பயணத்தின் ஒரு மாதிரி வரைபடமே மேலே கண்டது. பயணத்தின் ஆரம்பத்தில் ஒரே குழப்பம். குழப்பத்தின் முடிவில் நம்மை நாம் இழந்து விட்டோம் என்ற உண்மையின் உதயம். இழந்த நம்மைப் பெறுவதற்கான முயற்சி. முயற்சியில் வரும் சோதனைகள், அதனால் வரும் துன்பங்கள், இறுதியில் வெற்றி. ஆயினும் ஏதோ ஒரு குறை. காரணத்தை ஆராய்தல். நமது உண்மை இயல்பை உணரல். இறைவனை நாடி நமது பயணம் தொடர்தல் என்று செல்கிறது நமது பயணம். நம்மைத் தேடி ஒரு முதல் முயற்சி. வாழ்க்கை என்னும் காவியத்தைப் படிப்பதற்கான ஒரு முறை. ஒரு வழி. எல்லோருக்கும் இதுதான் வழி என்றோ, எல்லோரது வாழ்க்கைப் பயணமும் இங்கிருந்து தான் தொடங்கும் என்றோ நாம் கூறவில்லை. அதே வேளையில் நல்லொழுக்கம், ஆன்மீகம் என்பதெல்லாம் பொய்யாய், பழங்கதையாய், கனவாய் மாறிக் கொண்டிருக்கின்ற இந்த நவீன யுகத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேரும் பயணத்தை இங்கிருந்து ஆரம்பிக்க வேண்டிய நிலையில் தான் உள்ளனர் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்தப் பயணத்தின் வெற்றி நமது ஈடுபாட்டையும் லட்சிய வேகத்தையும் பொறுத்தே அமைகிறது. இதில் வெற்றி பெற்றவனுக்கே வாழ்க்கை உரியதாகிறது. அவன் மட்டுமே வாழ்கிறான். பிறர் வெறுமனே இருக்கிறார்கள். அவனுக்கு மட்டும் தான் 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை!'.

## கருணை



நபிகள் நாயகம் நாள் தவறாமல் பள்ளிவாசலுக்குப் போய், கடவுளை வணங்குவது வழக்கம். அவர் போகும் பாதையில் ஒரு பெண், வீட்டு மாடியிலிருந்து அவருடைய தலையில் குப்பையைப் போடுவார். ஆனால், நபிகள் அப்பெண்ணிடம் கோபம் கொள்ளாது பொறுமையாகத் தன்னைச் சுத்தம் செய்துவிட்டு பள்ளிவாசலுக்குச் சென்று விடுவார். ஒரு நாள் அவர் பள்ளிவாசலுக்குச் செல்லும் போது குப்பை தலையில் விழவில்லை. அப்பெண்ணையும் காணவில்லை. அவர் அப்பெண்ணின் அயலவரிடம் விசாரித்தபோது, அவளுக்குக் கடும் சுகவீனம் என்று கேட்டு மனங்கலங்கி, வீட்டுக்குச் சென்றார். அந்த அம்மா சுகமடைய வேண்டிப் பிரார்த்தனையும் சிகிச்சையும் செய்தார். அந்த அம்மாவும் சுகமடைந்தார், தான் செய்த பிழைக்காக மனம் வருந்தி, திருந்தினார்.

எதையும் எதிர்பாராமல், அன்பை அடிப்படையாகக் கொண்டதே உண்மையான கருணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் நல்லதா? கெட்டதா?

"உலகம் மிகவும் கெட்டுப் போய்விட்டது ஐயா! அந்தக்காலத்தில் இது போல் அக்கிரமம் நடந்திருக்குமா?" என்று சொல்லி அலுத்துக் கொள்கிறவர்கள் கொஞ்சப் பேர் இருக்கின்றனர். இந்த உலகம் மிகவும் முன்னேறிவிட்டது. அடுத்த கிரகத்தில் போய் வீடு கட்டலாமா? என்று யோசிப்பவர்களும் இருக்கிறார்கள். அதுசரி ! உண்மையாகவே இவ்வுலகம் நல்லதா? கெட்டதா?... கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள். உங்களிற்கு ஏதாவது பதில் கிடைக்கிறதா?

அப்படிச் சரியான முடிவு ஒன்றுக்கு உங்களால் வரமுடியாவிட்டால்!! வாருங்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் போவோம். அவர் இந்தக் கேள்விக்கு ஒரு கதை மூலம் விடை கூறியிருக்கிறார்.



"உலகம் நல்லதா அல்லது கெட்டதா?" என்று ஒருவன் ஓர் அறிஞரிடம் கேட்டான். அப்பொழுது அறிஞர் கூறினார், "உனது கேள்விக்கு நான் விடை சொல்வதற்கு முன் எனது ஒரு கேள்விக்கு நீ விடை சொல்வாயா?" என்றார். "சரி கேளுங்கள்" என்றார், முதலில் கேள்வி கேட்டவர். "பூனைக்குப் பல்லிருக்கிறதே! அது நல்லதா?... கெட்டதா..?" என்றார் அந்த அறிஞர். "என்ன இது! உலகம் நல்லதா கெட்டதா என்று கேட்டால் என்னிடமே திருப்பிக் கேள்வி கேட்கிறாரே இவர்" என்று யோசித்தார், ஒன்றும் புரியாமல் விழித்தார். அப்பொழுது அந்த அறிஞர், கேள்விக்கான விளக்கம் கொடுத்தார். பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று அந்தப் பூனையின் குட்டியிடம் கேட்டால் அது என்ன பதில் சொல்லும்? `எனது அம்மாவிடம் இருப்பது வெறும் பல் இல்லை. அது கருணையின் வடிவம். அந்தப் பல்லினால்தான் என்னைக் கவ்வித்தூக்கிக் கொண்டு போய் பாதுகாப்பான இடத்தில் வைப்பாள்! அம்மாவின் பல்லில்லையேல், நானும் இல்லை' என்று குட்டிப்பூனை பதில் கூறியிருக்கும்.

ஆனால், இதே கேள்வியை ஒரு எலியிடம் கேட்டால் அது என்ன சொல்லும்.'பல்லா அது? எமன்!... கடவுள் பூனையைப் படைத்ததுடன் விட்டிருக்கக் கூடாதா? அதற்குப் பல்லையும் ஏன் படைத்தார்? குத்தூசி போன்ற அந்தப்பல்லின் கொடுமை எத்தகையது என்று கடிபட்ட எனக்குத் தானே தெரியும்' என்று அழுது புலம்பியிருக்கும் எலி.

பூனையின் பல்லைக் குட்டிப் பூனை பார்க்கும் பார்வை வேறு, பூனையால் கொன்று தின்னப்படும் எலி பார்க்கும் பார்வை வேறு. அதேபோலத்தான் இந்த உலகம் நல்லதா? கெட்டதா? என்று கேட்டால் இந்த உலகத்தின் தன்மையைப் பார்க்கிறவர்களைப் பொறுத்துத்தான் இருக்கும். இந்த உலகம் உள்ளவரைக்கும் நல்லது என்று சொல்பவர்களும் இருப்பார்கள், கெட்டது என்று சொல்பவர்களும் இருந்து கொண்டேதான் இருப்பார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் அந்த மகான்?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஒன்று பட்டால் உண்டு வாழ்வு,**
**ஒற்றுமையின்றேல், அனைவருக்கும் தாழ்வு.**

# கேட்டுச் சுவைத்தவை


**பாலிகா மந்திர் சிறுமியர் இல்லத்தின் ஓராண்டு நிறைவை ஒட்டிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சாரதா மடம், இந்தியாவைச் சேர்ந்த இரு சந்நியாசினிகள் வந்திருந்தனர். 23-09-2001 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், அவர்களில் ஒருவரான அமலப்ராணா மாதாஜி அவர்கள் பக்தர்களுக்கு ஆற்றிய உரையின் பொழிப்பு இதுவாகும்.**



ஒரு முறை ஸ்வாமி விவேகானந்தரிடம் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிக் கூறக்கேட்ட போது சுவாமிஜி கூறினார் "நான் என்னவென்று சொல்வது ஸ்ரீ ராமகிருஷ்ணர் அன்பு என்பதன் இலக்கணம் அன்பே வடிவானவர்" என்றார். நாம் நினைக்கக் கூடும் அவர் அவ்வாறு ஸ்வாமிஜியிடம் மாத்திரம் அல்லது தனது அவதார லீலைக்காகவென வந்தவர்களிடம் மாத்திரம் அப்படி அன்பாக இருந்தார் என்று. இல்லை! உண்மையில் அனைவருக்குமே அன்பு மயமானவர். அல்லாவிட்டால் எல்லாம் வல்ல மூவுலகை படைத்துக் காத்து அருள் செய்பவர் ஏன் கீழ் இறங்கி மானிட உருவம் எடுக்க வேண்டும்? பகவத்கீதையில் கூறப்படுவது போன்று 'தர்மத்தைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் நான் யுகம் தோறும் அவதரிக்கின்றேன்'. என்பதிற்கிணங்க ஏன் இறைவன் மானிட உருவம் தாங்கிக் கஷ்டப்பட வேண்டும். படைத்துக் காப்பவன், தான் இருந்த இடத்தில் இருந்து கொண்டு இவற்றைச் செய்ய முடியாதா என்ன? பகவத்கீதையிலேயே இன்னோர் இடத்தில் சொல்லப்படுகிறது 'அவன் எம் தாய், எம் தந்தை, எம் உற்றார், உறவினர்' என்று. அப்படி இறைவன் எமக்கு மிகவும் நெருங்கியவன். நாம் கஷ்டத்தின் நிமித்தம் எமக்கு ஆறுதல் இல்லையா! என ஏங்கி ஒவ்வொரு வாசலாகத் தேடிக்கொண்டிருக்கும் போது எமக்கு மிகவும் நெருங்கியவனான இறைவன் எவ்வாறு பார்த்துக்கொண்டிருக்க முடியும்? தன்னையே கட்டுப்படுத்த முடியாத அன்பின் வெளிப்பாட்டால் மானிட உருவம் தாங்கி எமக்காக வருகிறான்; எம்முடன் சேர்ந்து தானும் கஷ்டத்தை அனுபவித்து ஒரு எடுத்துக்காட்டாக வாழ்கிறான்; எவ்வாறு இந்த மாயையில் இருந்து மீள்வது என்று வழிகாட்டுகிறான்; பெறுதற்கரிய இந்த மானிடப் பிறவியின் உண்மை இலட்சியம் 'எமது உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொரூபத்தை அறிவதே' என்பதை எமக்கு ஞாபகப்படுத்துவதற்காகவே இப்புவியில் அவதரிக்கிறான். ஆகவே இறைவன் அன்பே வடிவானவன் தானே.!

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அமுதமொழிகளைப் புரட்டினாலே, இது தெளிவாகும். தூய உள்ளம் படைத்த தன் துறவறச் சீடர்களுக்காக மட்டுமல்ல, எமது பலவீனத்தை உணர்ந்து, உலகின் பிடியிலிருந்து விடுபட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் எம்மைப் போன்றவர்களுக்காகவும் அவர் எவ்வளவு அன்பை வாரி வாரி இறைத்தார் என்பதை உணரலாம். அமுதமொழிகளிலிருந்து சில சம்பவங்களை உங்களுக்குத் தருகிறோம். . .

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தூய்மையே வடிவானவர். தூய்மையற்றவர்கள் தொடுவதையோ, அவர்கள் கொண்டுவந்த உணவை உட்கொள்வதையே சகித்துக்கொள்ள முடியாதளவு தூய்மையானவர். ஒருமுறை ஒரு தூய்மையற்ற வீட்டு வேலைக்காரி, எதிர்பாராத விதமாக தனது காலைத் தொட்டதும் தேள் கொட்டியதைப் போன்ற உணர்வில் விலத்திச் சென்று, கங்கை நீரைத் தெளித்துக் கொண்டார். ஆனால், அவ்வாறு தான் பலர் மத்தியில் செய்தது அவளை எந்தளவிற்குப் பாதித்திருக்கும் என எண்ணினார். உடனே அவளருகில் உட்கார்ந்து தன் இனிய குரலால் அன்னையின் பாடல்களை அவளுக்காகவே பாடி, அவளின் மனத்துயர் துடைத்து அனுப்பினார். நாமாக இருந்தால் எவ்வளவு திட்டியிருப்போம்! ஆனால் ஒரு வேலைக்காரியிடமும் தன் அன்பைக் காட்டியதை இச்சம்பவம் உணர்த்துகிறது.

ஒரு முறை பிரம்மசமாஜ பக்தர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரை, அவர்களது பிரார்த்தனைக் கூட்டத்திற்கு அழைத்திருந்தனர். ஆனால் அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பெருமையை அறியாததால் சரியாகக் கவனிக்கவும் இல்லை. பிரார்த்தனை முடிவில், ஓர் மூலையில் அவருக்கு ஆசனம் போடப்பட்டு ஆகாரம் வழங்கப்பட்டது. கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள், பிரம்மசமாஜ பக்தர்களைக் கவனிப்பதிலேயே மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். இருந்தாலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர், விடைபெறுவதற்கு முன்பு, அவர்களுக்காக சிறிது நேரம் ஜெபம் செய்து, அவர்களையும் ஆசீர்வதித்துவிட்டுத்தான் வந்தார் என்று 'ம' கூறுகிறார்.

சாரதாப்ரசன்னர் என்பவர் தன் மகனை இழந்து, அவரது இறுதிக்கடமையை முடித்துவிட்டு, சோகம் தாளாமல் சவக்காலையில் இருந்து நேராக ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்தார். அவரிடம் துக்கம் விசாரித்து, ஏதோ தன் மகனையே இழந்தவர் போல், அன்னையிடம், 'அம்மா! ஆனந்தமயீ! என்னை இவ்வாறு நிரானந்தன் ஆக்கலாமா?' என்று வேண்டி உருகிப் பாடினார். இப்படியாக பல நிமிடங்கள் ஓர் தெய்வப் பித்தேறிய நிலையில் பாடினார். பின்னர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதாபிரசன்னர் கூறுகிறார், 'எனக்குத் தெரியும், உங்கள் ஒருவரால் தான் என்னைச் சாந்தப்படுத்த முடியும் என்றுதான் நேராக உங்களிடம் ஓடி வந்தேன்' என்றார்.

அதேபோல் கிரீஷ் சந்திரகோஷ் என்ற நாடக ஆசிரியன், மிகவும் மோசமானவன் அவனே சொல்வதுண்டு "என்னைப் போன்ற பாவி இவ்வுலகில் இல்லை! நான் இருக்கும் இடத்தில் ஏழு அடிக்குப் பாவம் நிறைந்திருக்கும்." என்பான். பின்னாளில் சிவாவதாரம் என்று சொல்லப்படும் சுவாமி விவேகானந்தருக்கு அருகிலேயே உட்காரும் தகுதியுடைய ஒரு ஞானி ஆனான். ஒரு முறை அவன், மது வெறியில், ஸ்ரீ ராமகிருஷ்ணரையே மோசமான வார்த்தைகளால் திட்டிவிட்டுச் சென்றான். ஒருகணம் ஸ்ரீ ராமகிருஷ்ணரே "சீ, இவன் ஏன் இப்படி?" என்று யோசித்தார். யாரோ கூறினார்கள், காளியன் என்ற பாம்பு நஞ்சையே கிருஷ்ணருக்குக் கொடுத்து "கண்ணா! நான் என்ன செய்வது? இதைத்தான் நீ எனக்குத் தந்திருக்கிறாய்" என்றதாம். இதைக் கேட்டதும் அந்த இராத்திரி வேளையிலேயே, ஒரு வண்டியை அமர்த்திக் கொண்டு கிரீஷினுடைய வீட்டிற்குச் சென்றார். அவனும் அங்கே, தான் செய்த தவறை நினைத்து நொந்து வெதும்பிக் கொண்டிருந்தான். அவனை மன்னித்து அருள்பாலித்து வந்தார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். பின்னாளில் கிரீஷ், "எப்படியோ இருந்த என்னை தன் அன்பாலேயே மாற்றிவிட்டார். இவரை இறைவன் என்றே அல்லாமல் வேறு என்னவென்று அழைப்பது?" என்று கூறுவதுண்டு.

இப்படி ஒன்று இரண்டல்ல, அமுதமொழிப் பக்கங்களைப் புரட்டினால், பல சம்பவங்களைக் காணலாம். தனது சாதனைகளை முடித்து, அடுத்து என்னம்மா? என்று அன்னையிடம் கேட்டபோது "பொறுத்திரு பல குழந்தைகள் உன்னிடம் வருவார்கள்" என்றாள் அன்னை. தினமும் அன்னைக்கு ஆரத்தி நடக்கும் போது கோபுரத்தில் ஏறி நின்று 'ஓ !... என் அன்புச் செல்வங்களே எங்கே இருக்கிறீர்கள்? எப்போது வருவீர்கள்' என்று கல்கத்தாவை நோக்கிக் கூவி அழைப்பாராம் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

"ஒரு தாய் தன் பிள்ளைக்காக ஏங்குவதை விட, ஒரு காதலி தன் காதலனுக்காக ஏங்குவதை விட, உங்களுக்காக நான் அந்நாளில் எவ்வளவு ஏங்கியிருப்பேன்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் தன் சீடர்களிடம் சொல்வதுண்டு. இப்படி அன்பே உருவாய் விளங்கும் பகவானின் இந்த அழைப்பை எம் இதயங்களிலும் கேட்போமாக ! அவரருளாலே அவர் தாள் பணிவோமாக.

எல்லாப் பெருக்கமும் வாழ்வு. எல்லாச் சுருக்கமும் சாவு. எல்லா அன்பும் பெருக்கம். எல்லாச் சுயநலமும் சுருக்கமே. எனவே வாழ்வைப் பற்றிய ஒரே விதி அன்பே. அன்புடையவனே வாழ்பவன்.

- சுவாமி விவேகானந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை நெகிழ வைக்கும் உண்மை...



***ஒரு மனிதனின் வாழ்க்கையில் மிகவும் உயரிய பகுதி எனப்படுவது மிகச்சிறிய, யாராலும் பேசப்படாத, புகழ்ச்சியற்ற, ஏன் தானே மறந்த ஆனால் அன்பையும், இரக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட சம்பவம் தான்.***

***- வில்லியம் வேர்லவேத்***

நான் சிறுவனாக இருந்த போது, நானும் என் தந்தையும் ஒரு வரிசையில் சர்க்கஸ் பார்ப்பதற்கு அனுமதி பெறக்காத்திருந்தோம். இறுதியாக எமக்கும், அனுமதி வழங்குபவருக்கும் இடையில் ஒரே ஒரு குடும்பம் மாத்திரமே நின்று கொண்டிருந்தது. இந்தக் குடும்பம் என் மனதில் பெரியதொரு தாக்கத்தை உண்டாக்கியது. அக்குடும்பத்தில் 8 குழந்தைகள் அனைவரும் ஏறத்தாழ 12 வயதிற்க்குக் கீழ்ப்பட்டவர்கள். அத்துடன் அவர்களது தாய் தந்தையரும் இருந்தனர். அவர்களைப் பார்த்ததுமே, அவர்கள் வசதிகுறைந்தவர்கள் என்று கூற முடியும். அங்கு வரிசையில் சீராக நின்று கொண்டிருந்த அக்குழந்தைகள் மிகவும் எதிர்ப்பார்ப்புடன் காணப்பட்டனர். இதுதான் அவர்கள் செல்லும் முதலாவது சர்க்கஸ் என்பதை ஊகித்துக்கொள்ளவும் முடிந்தது. அனைவரும் ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் அங்கு தென்பட்டனர். அனுமதிச்சீட்டு கொடுப்பவர், அத் தந்தையைப் பார்த்து "எத்தனை அனுமதிகள் வேண்டும்" என்று கேட்டார். "8 சிறுவர் அனுமதியும் 2 பெரியோர் அனுமதியும்" என்றார் அந்த தந்தை. அனுமதிச்சீட்டு கொடுப்பவர் அனுமதிக்கான தொகையைக் கூறினார். அதைக்கேட்டதும், அத்தந்தை அதிர்ந்தவராய், சற்று அருகில் சென்று "என்ன விலை கூறினீர்கள்?" என்று கேட்டார். மீண்டும் அதே பதில் கூறப்பட்டது. அம்மனிதரிடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை. அவ்வளவு ஆர்வத்துடன் காத்துக்கொண்டிருந்த குழந்தைகளிடம் எவ்வாறு போதிய அளவு பணம் இல்லை என்று கூறுவது? இதைப்பார்த்துக் கொண்டிருந்த என் தந்தை தன் பையிலிருந்து 20 ரூபாயை எடுத்துக் கீழே போட்டார். (அத்தருணம் நாமும் அவ்வளவு வசதி படைத்தவர்கள் அல்ல). மெல்லக்குனிந்து அப்பணத்தை எடுத்து அம் மனிதரிடம் நீட்டி, "மன்னிக்கவும், இப்பணம் உங்கள் பையில் இருந்து வீழ்ந்தது" என்றார். அம்மனிதனுக்கும் உண்மை என்னவென்பது தெரியும். இருந்தாலும், அவர் யாரிடமும் கையேந்தி நிற்கவில்லை. என் தந்தையின் இந்த எதிர்பாராத, மெய்சிலிர்க்கும் இவ் உதவியை அவர் மனசார மிகவும் மெச்சினார். என் தந்தையின் கைகளைத் தன் இரு கைகளால் பிடித்துக்கொண்டு கண்களில் நீர்மல்க "மிக்க நன்றி, இவ் உதவி எனக்கும் எனது குடும்பத்திற்கும் ஒப்பற்றதாக இருக்கும்" என்று கூறினார்.



நானும் என் தந்தையும் அங்கிருந்து வீட்டுக்குத் திரும்பினோம். நாம் அன்று சர்க்கஸ் பாராது வீடு திரும்பினோம். ஆனால் வெறுமனே திரும்பவில்லை. சர்க்கஸ் பார்த்ததை விட, கூடிய மகிழ்ச்சியுடன் திரும்பினோம். இம் மெய்சிலிர்க்கும் சம்பவம் எம் இதயத்தை ஏங்க வைக்கும் ஒரு சம்பவம் அல்லவா? யாருமே பார்க்காத முறையிலும், பெறுபவர் தாழ்மை உணர்வு பெறாத வகையிலும் எவ்வளவு கச்சிதமாக உதவி செய்யப்பட்டுள்ளது. இது இறைவனையே கடனாளியாக்கும் கடன் அன்றோ...?

நன்றி 'East & West' - 1996 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ண குடும்பம்

"ராதையின் அம்சம்" என ஸ்ரீராமகிருஷ்ணரால் சிறப்பித்துப் போற்றப்பட்ட சுவாமி பிரேமானந்தரின் புனித சரிதத்தை எமது நான்காவது இதழ் ஏந்தி வருகிறது. ஸ்ரீராமகிருஷ்ணர் தனது சாதனைகளை ஊட்டி வளர்த்தெடுத்த ஆன்மீகக் குழந்தைகளின் வரிசையில் சுவாமி பிரேமானந்தர் அடுத்தவராகத் திகழ்கிறார். 'பிரேமை' என்பது இறைவனிடத்தில் கொள்ளும் எல்லையற்ற அன்பு. இந்த பிரேமபாவம் இறைவனிடம் மட்டுமன்றி அவனது பக்தர்களின் மீதும் ஆறாகப் பெருக்கெடுத்தது இச்சீடருக்கு! அதனாலேயே சுவாமி விவேகானந்தர், இவருக்கு 'பிரேமானந்தர்' என்ற சந்நியாச நாமத்தை இட்டார்.



இவர், பாபுராம் என்ற பெயருடன் இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் 1861 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 10 ஆம் திகதியிலே இப்புவியில் அவதரித்தார். பெற்ற மகன் தனை, தன் நடமாடும் இஷ்டதெய்வமாம் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு, தானே மனமுவந்து கொடுத்த ஆன்மீகத்தாய் மாதங்கினீ! தியானம், ஜபம் முதலியவற்றால் தன்னை ஆன்மீகத்தில் உயர்த்திக் கொள்வதுடன், தனது குழந்தைகளையும் ஆன்மீக வாழ்வில் நாட்டமுள்ளவர்களாகவே வளர்த்தார். அதனால், அன்னையின் ஆன்மீக நாட்டம் குழந்தை பாபுராமிலும் மிகைப்பட்டதில் வியப்பேதுமில்லை! தனது உயர்கல்வியைத் தொடரும் வேளையில் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடரான சுவாமி பிரம்மானந்தர், பாபுராமுக்கு உற்ற தோழரானார். இருவரும் தமது கல்லூரி முடிந்ததும் தக்ஷிணேஸ்வரம் சென்று குருதேவரைச் சந்திப்பது வழக்கமாகியது. ஒவ்வொருவரையும் பார்த்த உடனேயே அவர்களது உள்ளத்தைப் படிக்கும் குருதேவர், "இவன் எனக்குரியவன்" என்பதை பாபுராமைப் பார்த்ததுமே கூறிவிட்டார். முதற்சந்திப்பிலேயே பாபுராமிற்கும் ஸ்ரீராமகிருஷ்ணருடனேயே தனது வாழ்நாள் பூராவும் இருக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டுவிட்டது. தனது தாயின் முழுச்சம்மதத்துடன் உலகவாழ்க்கையைத் துறந்தார். பாபுராமாக இருந்தவர், சுவாமி பிரேமானந்தராக "ஸ்ரீராமகிருஷ்ணர்" எனும் ஆன்மீகப் பொக்கிஷத்துடன் சேர்ந்து கொண்டார். இறைநாமத்தைக் கேட்டதுமே சமாதி உணர்வுக்குச் சென்றுவிடும் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு வேண்டியதைச் செய்ய, அருகிலிருந்தே பணிவிடை செய்யும் பெரும்பாக்கியம் பெற்றார் சுவாமி பிரேமானந்தர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதேவர் சமாதியடைந்த பின்பும் தன்னுடன் உயிரோடு வாழ்வதாகவே சுவாமிகள் கூறுவார். பேலூர் மடத்திலே சந்நியாசிகளுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பு சுவாமிகளிடம் வந்தது. மடத்து வேலைகள் அனைத்தையும் குருதேவருக்குச் செய்யும் வழிபாடாக நினைத்துச் செவ்வனே செய்யப் பழக்கினார். பூந்தோட்டங்களைக் கவனிக்கும்போது, ரோஜாச் செடிகளின் முட்கள் அடியோடு வெட்டப்பட வேண்டும் என்பது சுவாமிகளின் கட்டளை. ஏனெனில் "பூந்தோட்டத்தில் உலாவவரும் குருதேவருடைய வேட்டிகளை முட்கள் தைத்துவிடும். எச்சரிக்கை!" என்று பிரம்மச்சாரிகளை எச்சரிப்பார். இவ்வாறு நிதரிசனமாக குருதேவரை மனக்கண்ணில் வைத்துப் பூஜை செய்யும் சுவாமி பிரேமானந்தருக்கு குருதேவருடைய பக்தர்களுக்குப் பணி புரிவதென்றால் பேரானந்தம்! நேரங்காலம் பாராது மடத்து வேலைகள் எல்லாம் முடிந்தபின்பு பக்தர்கள் வந்தாலும், அவர்களுக்குப் பிரசாதம் கொடுக்காமல் அனுப்பமாட்டார். பசித்து வருபவர்களுக்குத் தானே சமையலறைக்குச் சென்று சமைத்து உணவு பரிமாறுவார். இவருடைய இந்த தாயன்பினால் கல்லூரி மாணவர்களும் சுவாமிகளிடம் வந்துவிட்டுத் தான் வீடு செல்வார்கள். "பல உலக இன்னல்களை அனுபவிக்கும் மக்கள், மன அமைதிக்காக குருதேவரின் இல்லத்துக்கு வருகிறார்கள். ஆகவே அவர்கள் எந்த நேரத்தில் வந்தாலும் நாம் பணிபுரிய வேண்டும். பகவான், பாகவதம், பக்தர்கள் எல்லாம் ஒன்றே!". என சக சந்நியாசிகளுக்கும் கூறுவார். சுவாமிகளின் அன்புவலையில் சிக்கிய பக்தர்கள் கூட்டத்தில் முஸ்லிம்களும் அடங்குவர். பக்தர்களின் அழைப்பை ஏற்று பல்வேறு இடங்களுக்கும் சென்று குருதேவரின் வாழ்க்கைச்சம்பவங்களை மிக உருக்கமாகக் கூறுவார். வெளியே செல்வதற்கு முன்பு, சாரதா அம்மாவிடம் சென்று ஆசிபெற்றுத் தான் செல்வார். சுவாமிகளுடன் அடிக்கடி சீண்டி விளையாடித் தனது அன்பைப் பகிரும் சுவாமி விவேகானந்தரும் "பக்தர்கள்" விஷயத்தில் விலகியே நின்றார்! "அடியார்க்கும் அடியேன்" ஆகப் பணிபுரியும் சுவாமி பிரேமானந்தரின் இந்தப் பேரன்பைக் கண்டு போற்றிப் புகழ்வார். "மடத்திலேயே பக்தர்களுக்கென ஒரு ஹோட்டல் உருவாக்கவேண்டியது தான்!" என்று நகைச்சுவையாகக் கூறி, சுவாமிகளை உசார்படுத்துவார்!

பிளேக், கொலரா மோசமாகப் பரவிய காலத்தில் மக்களைக் காக்கும் பணியில் முன்னிற்பார். இடையறாத சேவையினால் சுவாமிகளுக்கும் இரு தடவைகள் கொலரா நோய் தாக்கிற்று. இதனால் உடல் பலவீனமடைந்து படுக்கையில் போட்டது. தனது இறுதி நேரத்திலும் சக சந்நியாசிகளை அழைத்து "இறைவனுடைய பக்தர்களுக்கு மனந்தளராது பணிபுரியுங்கள். அதுவே நீங்கள் குருதேவருக்குச் செய்யும் வழிபாடு" எனக் கேட்டுக் கொண்டார். பக்தர்களின் தாயாக விளங்கிய சுவாமி பிரேமானந்தர் 1918 ஆம் ஆண்டு ஆடி மாதம் முப்பதாம் திகதியன்று "ராமகிருஷ்ணரின் படத்தைப் பார்த்தவாறு 'அருள், அருள், அருள்' எனக் கூறியவாறே பரமபதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா ஆண்டினைக் கொண்டாடும் இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலை.

கொழும்பு வாழ் இந்து மாணவர்களுக்கு அறக்கல்வி போதிக்க எந்தவொரு ஞாயிறு சமய பாடசாலையும் இல்லையென்ற குறையைப் போக்குமாறு பக்தர்கள் பலர் கேட்டதற்கு இணங்க, இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலை 17-08-1952 அன்று - கிருஷ்ண ஜெயந்தி தினத்தில், இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் அப்போதைய தலைவராக இருந்த சுவாமி அஸங்கானந்தர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அன்று 15 மாணவர்களுடன் ஆரம்பமாகிய இப் பாடசாலை இன்று 850இற்கும் அதிகமான மாணவர்கள் அறக்கல்வி பயிலும் பாடசாலையாக வளர்ந்துள்ளது. அர்ப்பணிப்புச் சிந்தை கொண்ட 50 தொண்டராசிரியர்கள் பணிபுரிகின்றனர். கடந்த 49 வருடங்களில், இனக்கலவரங்கள் நடந்த காலங்களில் சிறிது பின்னடைவுகள் ஏற்பட்ட போதும், சுவாமிஜிக்களின் தொடர் முயற்சிகளால் மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ந்து வந்துள்ளது. 2001ஆம் ஆண்டு கிருஷ்ண ஜெயந்தி தினத்தில், இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 49 வருடங்கள் முடிவடைந்து 50ஆவது வருடம் - பொன்விழா ஆண்டு - ஆரம்பமாகியுள்ளது. இதனைச் சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு, வரும் ஒரு வருட காலத்தில், ஞாயிறு சமய பாடசாலையின் குறிக்கோளுடன் இசைவுறும் வகையில், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர்களின் பங்களிப்புடன் சில பணிகளைச் செய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளது.



**பொன்விழா ஆண்டு செயற்படுத்த எண்ணியுள்ள திட்டங்களில் சில:**

(1) எமது மாணவர்களின் உதவியுடன் சிறு சிறு பொருட்களைச் சேகரித்து வறுமையில் வாடும் மாணவர்களுக்கு வழங்குதல்.

(2) ஏனைய சில ஞாயிறு சமய பாடசாலைகளின் விருத்திக்கு உதவுதல்.

(3) மாணவர்களுக்கு ஆளுமைவிருத்திச் சிறப்புச் செயலமர்வுகள் மற்றும் செயற்பாடுகளை நடாத்துதல்.

(4) அகில இலங்கை அளவிலான கட்டுரை, ஓவியம் போன்ற போட்டிகளையும் முடிந்தளவு இடங்களில் பேச்சு, சங்கீதம், கோலம், ஆன்மீக உடை, மாலை கட்டுதல் போன்ற போட்டிகளையும் நடாத்துதல்.

(5) ஆதரவற்ற மற்றும் வலது குறைந்த மாணவர் இல்லங்களுக்கு விஜயஞ்செய்து பஜனை, சிறு நாடகங்கள், சிரமதானம் செய்தல், சிறு அன்பளிப்புக்களை வழங்குதல் போன்ற மாதாந்த செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்.

(6) எமது உயர் வகுப்பு மாணவர்களுக்குச் சிறிய செயற்திட்டங்களில் பயிற்சி வழங்கல்.

(7) கிராமங்களுக்கு விஜயம் செய்து போதைவஸ்து ஒழிப்பு, மருத்துவத் தகவல்கள் போன்ற சமூக நலப் பிரச்சாரங்களையும், ஆன்மீக சொற்பொழிவுகள், பஜனை போன்ற சிறு நிகழ்ச்சி-களையும், சிறுவர்களுக்கான சிறு போட்டிகளையும் நடாத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) பெற்றோர்களுக்கான சிறப்புச் செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.

(9) பழைய மாணவர்களின் பங்களிப்புடன் சில நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

(10) எமது மாணவர்களின் சிறந்த ஆக்கங்கள் அடங்கிய பொன்விழா மலரொன்றை வெளியிடுதல்.

**ஏற்கனவே செயற்படுத்தப்பட்ட சில திட்டங்கள்.**

12-08-2001 காலை 6:30 மணியளவில் உயர்வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் நடாத்திய சிறப்புப் பிரார்த்தனை ஒன்றுடன் பொன்விழா ஆண்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

(1) சில ஞாயிறு சமய பாடசாலைகளின் விருத்திக்கு உதவும் திட்டத்தின் கீழ், உயர் வகுப்பு மாணவர்கள், சில வாரங்களின் முன் ஆரம்பிக்கப்பெற்ற, நுகேகொடை தமிழ் மகா வித்தியாலய ஞாயிறு பாடசாலைக்குச் சென்று சிரமதானம் மூலம் வகுப்பறைகளையும் சுவாமியறையையும் சுத்தப்படுத்தினர். சுழற்சி முறையில் ஆசிரியர்களும் உயர் வகுப்பு மாணவர்களும் வாராந்தம் அங்கு சென்று சமய வகுப்புக்களை நடாத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.



(2) மொறட்டுவையில் தந்தெனிய வத்தை என்று ஒரு கிராமம் உண்டு. மிகவும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருக்கும் அக்கிராமத்தில் 40 தமிழ்க் குடும்பங்கள் வசித்து வருகின்றன. பாடசாலைக்குச் செல்லும் அவர்களின் குழந்தைகளை எமது செலவிலேயே அழைத்து வந்து, எமது ஆசிரியர்களும் மாணவர்களும் சேகரித்த படுக்கை விரிப்புக்கள், கொப்பிகள், பேனைகள் உட்பட சில அத்தியாவசிய பொருட்களை வழங்கியதுடன் அவர்களுக்கும் உடன் வந்த பெற்றோருக்கும் மதிய உணவும் வழங்கப்பட்டது.



(3) கொம்பனித் தெருவில் சைவ முன்னேற்றச் சங்கத்தினரால் நடாத்தப்படும் ஞாயிறு சமய பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

(4) இரத்தினபுரி - இறக்குவானைப் பகுதியைச் சேர்ந்த 33 மாணவ-தலைவர்களுக்கு மூன்று நாள் உடனுறை ஆளுமைவிருத்தி முகாம் நடாத்தப்பட்டது. இது திங்கட்கிழமை (13-08-2001) முதல் வியாழக்கிழமை (16-08-2001) வரை நடைபெற்றது. ஆண்களும் பெண்களும் கலந்து கொண்ட இம் முகாமில் கலந்து கொண்ட 17 மாணவர்களும் 16 மாணவிகளும் தலைமைத்துவப் பண்பு விருத்தி மற்றும் ஆளுமைவிருத்தியுடன் தொடர்புடைய பல செயற்பாடுகளில் ஈடுபட்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி பெற்றனர். அத்துடன் யோகாசனப் பயிற்சியும், பஜனைப் பயிற்சியும் வழங்கப்பட்டன.



(5) 30-09-2001 முதல் 02-10-2001 வரை எமது உயர் வகுப்பு மாணவர்களும், சில ஆசிரியர்களும் சுவாமி ஆத்மகணானந்தஜி தலைமையில் மன்னார் சென்று தலைமன்னார், பேசாலை, மடுக்கரை, மன்னார் பகுதிகளிலும் திருக்கேதீஸ்வரத்திலும் பல அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள், மக்கள் கலந்து கொண்ட பல சற்சங்கங்களை நடாத்தினர். மன்னார் அன்னை இல்லத்தில் வதியும் 30 மாணவியருக்கு எமது ஆசிரியர்களும் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் சேகரித்த படுக்கை விரிப்புக்கள், துவாய்கள், கொப்பிகள், பேனைகள், புத்தகங்கள் உட்பட சில அத்தியாவசிய பொருட்களை வழங்கியதுடன் இல்லத்திற்கென சுவர்க்கடிகாரம் ஒன்றும் வழங்கப்பட்டது. அத்துடன் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியிலும் திருக்கேதீஸ்வரம் கோயிலிலும் ஆன்மீக புத்தகக் கண்காட்சிகளும் நடாத்தப்பட்டன.



(6) 13-10-2001, 14-10-2001 திகதிகளில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில், கிட்டத்தட்ட 1000 வறிய குடும்பங்களுக்கு இலவச மருத்துவ முகாம் ஒன்றும், தலவாக்கலையில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 13 குடும்பங்களிற்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன. 30ற்கும் மேற்பட்ட நமது ஞாயிறு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றார் மற்றும் வைத்தியர்கள், சுவாமி ராஜேஸ்வரானந்தஜி தலைமையில் சென்று கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதத்திலிருந்து...

அன்பார்ந்த இளைஞர்களே!

இந்த வாழ்க்கை குறுகியது. உலகின் வீண் ஆடம்பரங்கள் நிலையற்றவை. பிறருக்காக உயிர் வாழ்பவர்களே வாழ்பவர்கள், ஏனயவர்கள் வாழ்ந்தாலும், இறந்தவர்களுக்கே சமமானவர்கள்.

அன்பு பலனளிக்காமல் போவதில்லை. என் மகனே, இன்றோ நாளையோ யுகாந்திரத்திலோ உண்மை வெல்வது நிச்சயம். அன்பு நிச்சயம் வெல்லும். நீ உனது மனித சகோதரர்களை நேசிக்கிறாயா? கடவுளை எங்கே போய்த் தேடுகிறாய்? ஏழைகள், துன்புறுபவர்கள், பலவீனர்கள் அனைவரும் தெய்வங்கள் அல்லவா? அவர்களை ஏன் முதலில் வழிபடக் கூடாது.

உலகிற்கு யார் ஒளி தருவார்கள்! பண்டைக்காலத்தில் தியாகமே வாழ்க்கை நியதியாக இருந்தது. வரப்போகின்ற யுகங்களுக்கும் அதுவே நியதியாக இருக்கும். எல்லோரின் நன்மைக்காகப் பூமியின் சிறந்த வீரர்கள் தங்களைத் தியாகம் செய்தேயாக வேண்டும். நிலைத்த அன்புடனும் இரக்கத்துடனும், நூற்றுக்கணக்கான புத்தரை ஒத்த இளைஞர்கள் தேவை.

உலக மதங்கள் உயிரற்ற கேலிக்கூத்துக்களாகி விட்டன. உண்மை வாழ்வே இன்றைய உலகின் தேவை. கொழுந்து விட்டெரிகின்ற அன்பு கொண்ட, சுயநலம் இல்லாத வாழ்க்கை உடையவர்களே உலகிற்குத் தேவை. அத்தகைய அன்பு ஒவ்வொரு சொல்லையும் இடிபோன்று இறங்கச் செய்யும்.

அன்பின் எல்லாம் வல்ல ஆற்றலில் நம்பிக்கை கொள். மின்னிமறைகின்ற இந்தப் பெயர் புகழை யார் பொருட்படுத்துகின்றனர். உன்னிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால் நீ எல்லாம் வல்லவன். நீ முற்றிலும் சுயநலம் அற்றவனா, அப்படியானால் உன்னை எதனாலும் தடுக்க முடியாது. ஒழுக்கத்தின் வலிமையே எங்கும் வெல்லக்கூடியது. கடலின் நடுவிலுங்கூட இறைவனே தனது குழந்தைகளைப் பாது காக்கின்றான். வீரர்களாக இருங்கள் இறைவன் உங்களை ஆசீர் வதிக்கட்டும்.



அன்புடன்



சுவாமி விவேகானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது உங்கள் பக்கம்

சென்ற இதழைக்காட்டிலும், இம்முறை கிடைக்கப்பெற்ற புதிர் விடைகள் அதிகமாயினும், சரியான விடை இன்னும் கிடைக்கப் பெறவில்லை. கூடுதலான விடைகள், "வெள்ளம் வருமுன், அணைகட்ட வேண்டும்". என்பதாகவே அமைந்தன. ஆனால் அப்படத்தில், வெள்ளமோ, அணையோ குறிப்பிட்டுக் காட்டப் படவில்லை. 'ஓர் ஆற்றின் இருமருங்கில், இரு வித்தியாசமான மனநிலை காணப்படுகிறது'. இதனை அடிப்படையாகக் கொண்டு, உங்கள் விடைகளை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.



புதிர் விடைகளுக்கான இறுதித்திகதி : 15.12.2001

உங்கள் வாழ்வில் சீரிய பண்பு வெளிப்பட்ட உருக்கமான சம்பவங்கள் இருப்பின் அதை எமக்குத் தெரியப்படுத்துங்கள். எம் இதழில், 'நெஞ்சை நெகிழ வைக்கும் ஒரு உண்மை...' என்ற தொடரில் அவற்றிற் சிறந்தவற்றை வெளியிடுவோம்.

நீங்கள் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி :-

'அறநெறி அமுதம்' ஆசிரியர் குழு,
இராமகிருஷ்ண மிஷன்,
40, இராமகிருஷ்ணா வீதி,
கொழும்பு-06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் பணி!

ஓதுதல், ஒழுகுதல், ஓதுவித்தல் என்பதற்கிணங்க, பல அருமையான நூல்களில் பொதிந்து கிடக்கும் ஆக்கங்களைத் திரட்டியெடுத்து அவற்றை மீண்டும் புதுப்பொலிவுடன் மக்களிடையே முக்கியமாக எமது மாணவ சமுதாயத்துக்குப் போய்ச்சேர வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படும் சிறு முயற்சியே இந்த அறநெறி அமுதம்!

எமது சமயத்திலே தோன்றிய மகாபுருஷர்கள் தெய்வீகமான மனித வாழ்க்கைக்காகவென விட்டுச்சென்ற நற்கருத்துக்கள் பல புத்தகங்களினுள்ளே புதைந்து கிடக்கின்றன. அவற்றை நமது மாணவர்களும் தேடிக்கற்கத் தூண்டுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமைவது மட்டுமல்லாமல், தாம் கற்றறிந்து திரட்டிய முத்துக்களைக் கோர்த்து இதழ் எனும் ஆரமாக வெளிக்கொணர்வதற்கும் வழிவகுக்கின்றது. அத்துடன் இப்புத்தகம், எமது மாணவர்களாலேயே வடிவமைக்கப்பட்டது. இந்நவீன காலத் தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்திப் பிறரும் பயன்பெறத்தக்க ஆக்கமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு கூட்டுமுயற்சியாகும்.

இந்நூல் ஒவ்வொரு மாணவனையும் சென்றடைய வேண்டும் இதனால் பல்லாயிரக்கணக்கானோர்க்கு சமய விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதே எமது இலக்கு! அதனாலேயே இப்புத்தகத்தின் விலை ரூ.10ற்கு மேற்படாதவாறு பேணவேண்டியுள்ளது.

எனவே நீங்களும் இவ்விதழ் ஆக்கப்பணியில் கலந்து கொள்ள முன்வரவேண்டும் என்று அன்புடன் விரும்புகிறோம். நீங்கள் பின்வரும் முறைகளில் பணிபுரியலாம்.

1. இந்நூலை நீங்கள் வாங்குவதுமட்டுமல்லாமல், கூடியளவு பிரதிகளை வாங்கித் தெரிந்தவர்களுக்குக் கொடுத்தல்.
2. இம் முயற்சிக்கு நன்கொடைகளை வழங்கல்.
3. வாழ்த்துக்கள் அல்லது வியாபார விளம்பரங்களை அளித்தல்.

உங்கள் ஆதரவுக்கு நன்றிகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நலன் நோக்கும் இயல்பை வளர்த்து ஒவ்வொன்றிலும் நன்மையைக் காண முயலவேண்டும். நமது உடலிலும் மனத்திலும் உள்ள குறைகளை நினைத்து, உட்கார்ந்து துயரப்பட்டால் நமக்கு அதனால் பயன் ஒன்றும் விளையாது. மாறான எண்ணங்களை அடக்கச் செய்யும் வீர முயற்சியே நமது ஊக்கத்தை மேல் நோக்கிச் செலுத்தும்.



- சுவாமி விவேகானந்தர்-


With Best Complements from

**SMARTIES**

**Whole sale Dealers In Textiles**

91/2, Second Cross Steet, Colombo - 11.

Tel : 449394


விலை ரூ. 10/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org